**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 126 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 12** |
| **Name** | : | **திரு. சுகுமாறன்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **04.09.2024**

எதிரி-1 ஆஜர். எதிரிகள் 2 முதல் 4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் வருவாய் துறையில் துணை ஆட்சியராகப் பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளேன். நான் மதுரை வருவாய் கோட்டாட்சியராக பணிபுரிந்த போது, மதுரை டவுன், பழைய மகாலிபட்டரோடு, கதவு எண்.26 ல் வசித்த ரமேஷ் என்ற காமாட்சிபாண்டியன் என்பவர் மனைவி பொன்மலர் என்பவர், 18.01.2010 அன்று தீக்காயங்களால் மரணம் அடைந்தது சம்பந்தமாக, தெற்குவாசல் காவல் நிலைய குற்ற எண்.89/2010 ன் முதல் தகவல் அறிக்கையை 18.01.2010 அன்று பெற்று, 19.01.2010 அன்று மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்குச் சென்று, இறந்து போன பொன்மலரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை அறையில் பார்வையிட்டேன். பொன்மலரின் உடம்பு தீக்காயங்களால் கருகி இருந்தது.

பின்னர் எனது புலனாய்வு அறிக்கையைத் தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ.12 ஆகும்** அதன் பிறகு, பொன்மலரின் தாயார் கிரிஜா, தகப்பனார் சந்திரசேகர், மற்றும் பஞ்சாயத்தார்களை விசாரணை செய்து, அவர்களது வாக்குமூலத்தைப் பதிவு செய்தேன். **பஞ்சாயத்தார்கள் வாக்குமூலங்கள் அதசாஆ.13 ஆகும்.** அதன்பிறகு, 19.01.2010 அன்று எனது முதல்நிலை அறிக்கையை மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், அதன் நகலினை காவல் துறை உதவி ஆணையர் அவர்களுக்கும், மற்ற ஒரு நகலை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் அனுப்பி வைத்தேன். **எனது முதல்நிலை அறிக்கை அதசாஆ.14 ஆகும்.** அதன் பிறகு எனது முதல் நிலை அறிக்கையில் பொன்மலரின் இறப்பிற்கு, வரதட்சணை காரணம் என்று குறிப்பிட்டு இருந்தேன். அதன்பிறகு, பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் எனது முடிவான அறிக்கையை 19.03.2010 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், அதன் நகலினை காவல் துறை உதவி ஆணையர் அவர்களுக்கும், மற்ற ஒரு நகலை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் அனுப்பி வைத்தேன். **எனது இறுதி அறிக்கை அதசாஆ.15 ஆகும்.** எனது முடிவான அறிக்கையில், நான் முதல் நிலை அறிக்கையில் சொன்னது போலவே, பொன்மலரின் இறப்பிற்கு, வரதட்சனை கொடுமை தான் காரணம் என்று குறிப்பிட்டிருந்தேன். பொன்மலரின் கணவர், மாமியார், மாமனார் ஆகியோர் எனது விசாரணையில் ஆஜராகவில்லை. எனவே, மேற்காணும் விசாரணையிலிருந்தும், வாக்குமூலங்களில் இருந்தும், சாட்சியங்களிலிருந்தும், பஞ்சாயத்தார்களின் அபிப்பிராயத்தில் இருந்தும், பிரேத்தைப் பார்வையிட்டதில் இருந்தும், பொன்மலரின் இறப்பிற்கு வரதட்சனை தான் காரணம் என்று குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்தேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி 1 தரப்பில்) :**

நான் விசாரணை செய்தது, வரசதட்சணை கொடுமை இருக்கிறதா இல்லை என்பதை அறிந்து கொள்வதற்காக என்றால் சரிதான். வரதட்சனை என்பது, திருமணத்திற்காக, பணமோ, நகையோ, சொத்தோ அல்லது திருமண பந்தம் தொடர்வதற்கு மேற்படி பணமோ, நகையோ, சொத்தோ கேட்பதாகும் என்றால் சரிதான். இந்த வழக்கில், சம்பவத்திற்கு முன்பே, பொன்மலர் விவாகரத்து வாங்கியிருந்தார் என்றால் எனக்குத் தெரியாது. சம்பவ காலத்தில், விவாகரத்து வழக்கு நிலுவையில் இருந்ததா என்ற விபரமாவது எனக்குத் தெரியுமா என்றால் வழக்கு நிலுவையில் இருந்ததாக, பொன்மலரின் தாயார் கிரிஜா அவரது வாக்குமூலத்தில் சொல்லியிருந்தார். விவாகரத்து கோரி பொன்மலர் தான் வழக்கு தொடர்ந்திருந்தார் என்ற விபரம் எனது விசாரணையில் தெரியவந்தது. பொன்மலர் விவாகரத்து கேட்டு போட்ட வழக்கு மனுவையோ, அதில் இருந்த ஆவணங்களையோ நான் எனது விசாரணையின் போது கேட்டு வாங்கி பார்க்கவில்லை. பொன்மலர் ஒரு இந்து பெண் என்றும் அவருக்கு இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது என்பது பற்றி எனக்குத் தெரியாது. அது பற்றி நான் கேட்டுக் கொள்ளவில்லை. இந்து பெண் என்றால் கழுத்தில் தாலி அணிய வேண்டும் என்றால் சரிதான். நான் பொன்மலரின் சடலத்தைப் பார்வையிட்டேன். அப்போது அவர் கழுத்தில் தாலி இல்லை. உடல் முழுவதும் கருகி இருந்தது. உடலில் அணிகலன்கள் எதுவும் இல்லை. பொன்மலரின் பெற்றோரிடம், பொன்மலர் தாலி அணிந்திருந்தாரா, விவாகரத்துக்குப் பின் அவர் தாலியை எடுத்துவிட்டாரா என்று நான் கேட்டுத் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பொன்மலர் இறக்கும் போது, அவருக்குத் திருமணமாகி எத்தனை ஆண்டுகள் கழிந்திருந்தது என்றால் 5 ஆண்டுகள் கழிந்திருந்தது. கடந்த 2015 ம் ஆண்டு அவர்களுக்கு திருமணம் நடைபெற்றுள்ளது. பொன்மலர் விவாகரத்து கேட்டு எந்த ஆண்டு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்று

எனக்குத் தெரியாது. பொன்மலருக்கும், 1 வது எதிரிக்கும் குழந்தைகள் எதுவும் இல்லை. அது சம்பந்தமாக நான் சாட்சிகளிடம் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. பொன்மலரின் தாயார் கிரிஜா எனது விசாரணையின் போது, "டாக்டர் அம்மாவிடம் கவுன்சிலிங் போனதாகவும், அப்போது,டாக்டர் உங்கள் மருமகனோடு உங்கள் மகள் வாழ்வதற்கு அர்த்தம் இல்லை" என்று வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அது சம்பந்தமாக டாக்டரை நான் விசாரிக்கவில்லை. அவ்வாறு விசாரித்தபோது, 1 வது எதிரி குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றவர் இல்லை என்று டாக்டர் சொன்னர் என்றும், அதனால் விவாகரத்து கேட்டு மனு தாக்கல் செய்தோம் என்றும அந்த வழக்கில் தனது மருமகன் ஆஜராககாததால், அந்த மனு exparty ஆகிவிட்டதாக பொன்மலரின் தாயார் எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த விவாகரத்து exparty ஆன பிறகு தான் பொன்மலரின் இறப்பு சம்பவம் நடந்துள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் பொன்மலரின் தாயார் கிரிஜா, தகப்பனார் சந்திரசேகர் மற்றும் பஞ்சாயத்தார்களை நான் விசாரணை செய்தேன். பஞ்சாயத்தார்கள் பொதுவான ஆட்களா என்றால் இரண்டு குடும்பத்திற்கும் பொதுவான ஆட்கள் ஆவார்கள். இரண்டு குடும்பத்திற்கு பொதுவான ஆட்கள் இல்லாமல் பொதுவான ஆட்களிடம் பஞ்சாயத்தார்களாக நான் விசாரணை செய்யவில்லை. பஞ்சாயத்தார்கள் மற்றும் அவர்களது விபரங்கள் பற்றி எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பஞ்சாயத்தார்கள் ஒவ்வொருவரையும் நான் தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை. மொத்தமாகத்தான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பஞ்சாயத்தார்களின் கருத்துக்களை எழுதி அதசாஆ.13 ல் அவர்களிடம் மொத்தமாக கையொப்பம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். பணம் குறித்து எந்த தேதி, மாதம், வருடம், எங்கு வைத்து கேட்கப்பட்டது என்ற விபரங்கள் பற்றி எனது விசாரணையில் தெரியவில்லை என்றால்

சரிதான். சாட்சிகளுக்கு நான் சம்மன் அனுப்பி வரவழைத்தேனா என்றால் இல்லை. இந்த வழககில் நான் சரியான முறையில் விசாரணை செய்யவில்லை என்றும், போலிசார் கேட்டுக் கொண்டதாலும், புகார்தாரரின் செல்வாக்கினாலும், நிர்பந்தத்தாலும், அதசாஆ.12 முதல் 15 வரை தயார் செய்த கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் 2 முதல் 4 வரை தரப்பில்) :</u>**

1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை